வகுப்பு : 8

தேர்வு எண் | | | | | | | |

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2022-23

நேரம் : 2.30 மணி

## கணிதம்

மொத்த மதிப்பெண்கள் : 100

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 10x1=10

1. $\frac{-5}{4}$ என்ற விகிதமுறு எண்ணானது ------ ஆகியவற்றின் இடையில் அமையும்.
   (A) 0 மற்றும் $\frac{-5}{4}$ (B) -1 மற்றும் 0 (C) -1 மற்றும் -2 (D) -4 மற்றும் -5
2. 43 இன் வர்க்கமானது ----- என்ற இலக்கத்தில் முடியும்.
   (A) 9 (B) 6 (C) 4 (D) 3
3. வட்டக் கோண பகுதியின் வில்லின் நீளம் -----
   (A) $\frac{\theta}{360} \times \pi r^2$ (B) $\frac{lr}{2}$ (C) $\frac{\theta}{360} \times 2\pi r$ (D) l + 2r
4. ஒரு வட்டத்தின் மீதுள்ள ஏதேனும் இரண்டு புள்ளிகளை இணைக்கும் கோடு -----
   (A) நாண் (B) விட்டம் (C) சுற்றளவு (D) ஆரம்
5. $7P^3$ மற்றும் $(2P^2)^2$ இன் பெருக்கற்பலன் ------
   (A) $14p^{12}$ (B) $28p^7$ (C) $9p^7$ (D) $11p^{12}$
6. அடுத்தடுத்த மூன்று எண்களில் மிகப்பெரிய எண் x + 1 எனில் மிகச்சிறிய எண் ----- ஆகும்.
   (A) x (B) x + 1 (C) x + 2 (D) x - 1
7. இரண்டு தொடர் தள்ளுபடிகளான 20% மற்றும் 25% ஆகியவற்றிற்கு நிகரான ஒரே தள்ளுபடி சதவீதம்------ ஆகும்.
   (A) 40% (B) 45% (C) 5% (D) 22.5%
8. ஓர் அசலின் மீதான வட்டி, இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கணக்கிடப்பட்டால், ஓராண்டிற்கு ---- மாற்றுக் காலங்கள் இருக்கும்.
   (A) 2 (B) 4 (C) 6 (D) 12
9. ஒரு முக்கோணத்தின் மூன்று கோண இருசமவெட்டிகளும் சந்திக்கும் புள்ளி ----- ஆகும்.
   (A) உள்வட்டமையம் (B) செங்கோட்டுமையம்
   (C) நடுக்கோட்டுமையம் (D) சுற்று வட்டமையம்
10. பதினோறாவது பிபனோசி எண் என்ன?
   (A) 55 (B) 77 (C) 89 (D) 144

II. கோடிட்ட இடத்தை நிரப்புக. 5x1=5

11. -1 இன் பெருக்கல் நேர்மாறு ---- ஆகும்.
12. ஒரு திண்ம உருளையின் குறுக்கு வெட்டுத் தோற்றம் ----- ஆகும்.
13. ஒரு மாறியில் அமைந்த ஒருபடிச் சமன்பாட்டிற்கு ----- தீர்வு மட்டுமே உண்டு.
14. X அச்சும் Y அச்சும் சந்திக்கும் புள்ளி ----- ஆகும்.
15. தேய்மான மதிப்பு சூத்திரம் ------

III. சரியா? தவறா? என கூறுக. 5x1=5

16. இரு விகிதமுறு எண்களின் சராசரியானது அவற்றிற்கு இடையே அமையும்.
17. ஒரு கனச் சதுரத்திற்கு 4 முகங்கள் உள்ளன.
18. $6xy + 3xy = 9x^2y^2$
19. செங்கோண முக்கோணத்தில் மிக நீளமான பக்கம் கர்ணம் ஆகும்.
20. மூன்று நாணயங்களை ஒரே சமயத்தில் சுண்டும்போது 6 விதமான விளைவுகள் கிடைக்கும்.

IV. பொருத்துக. 5x1=5

21. $a^m \div a^n$ - ஆரத்தின் இரு மடங்கு
22. விட்டம் - 2 : 1
23. $y^2 - 10y + 25$ - மூன்றாம் கால்பகுதி
24. நடுக்கோட்டு மையம் - $(y - 5)^2$
25. (-3 , -5) - $a^{m-n}$

V. ஏதேனும் 10 வினாக்களுக்க விடையளி.
(வினா எண் 40க்கு கட்டாயமாக விடையளி) 10x2=20

26. $\frac{13}{4}$ என்ற விகிதமுறு எண்ணை தசம வடிவில் எழுதுக.

27. $\left(\frac{-21}{5}\right)$ஐ $\left(\frac{-7}{-10}\right)$ஆல் வகுக்கவும்.

28. 6889 என்ற எண்ணை நீள்வகுத்தல் முறையில் வர்க்கமூலம் காண்க.

29. மதிப்பு காண்க : $(2^{-1} + 3^{-1}) \div 6^{-2}$

30. 70 செ. மீ ஆரமுள்ள வட்டமானது 5 சம அளவுள்ள வட்ட கோண பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. அவை ஒவ்வொன்றின் பரப்பளவைக் காண்க.

31. பெருக்கற்பலன் காண்க. $-2\ mn,\ (2m)^2,\ (-3\ mn)$

32. விரிவாக்குக : $4p^2 - 25q^2$

33. காரணிப்படுத்துக : $m^2 + m - 72$

34. தீர்க்க : $2x + 5 = 9$

35. 48 என்பது எந்த எண்ணின் 32% ஆகும்?

36. மின்னணுக் கடிகாரத்தின் குறித்த விலை ₹ 750, அதன் விற்பனை விலை ₹ 615 எனில் தள்ளுபடி சதவீதம் காண்க.

37. p = ₹ 5000, ஆண்டு வட்டி வீதம் r = 4%, n = 2 ஆண்டுகள் எனில் கூட்டு வட்டிக்கும் தனிவட்டிக்கும் உள்ள வித்தியாசத்தைக் காண்க.

38. கொடுக்கப்பட்டுள்ள முக்கோணத்தில் தெரியாத மதிப்பைக் காண்க.




39. ஒரு செங்கோண முக்கோணமானது 5 செ.மீ, 12 செ.மீ மற்றும் 15 செ.மீ ஆகிய அளவுகளை கொண்ட பக்கங்களைப் பெற்றிருக்க இயலுமா?

40. கொடுக்கப்பட்ட எண்களுக்குத் தொடர் வகுத்தல் முறையில் மீப்பெரு பொதுக் காரணியைக் காண்க. 455 மற்றும் 26

**VI. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி.**
**(வினா எண் 50க்கு கட்டாயமாக விடையளி)** **7x5=35**

41. பின்வரும் விகிதமுறு எண்களை ஏறுவரிசை மற்றும் இறங்க வரிசையில் எழுதுக $\frac{-3}{-5}, \frac{7}{-10}, \frac{-15}{20}, \frac{14}{-30}, \frac{-8}{15}$

42. 24 x 36 x 80 x 25 இன் கனமூலம் காண்க.

43. வட்டக்கோண பகுதியின் பரப்பளவு = 462 செ.மீ², r = 21 செ.மீ எனில் அதன் மையக்கோணம் காண்க.($\pi$= 22/7)

44. ஓர் ஏவுகணையின் படமானது படத்தில் கொடுக்கப்பட்டுள்ளவாறு அளவுகளைக் கொண்டுள்ளது. அதன் பரப்பளவைக் காண்க.




45. விரிவாக்குக : $(2a + 5)^3$

46. 210 ஆண்கள் நாளொன்றுக்கு 12 மணி நேரம் வேலை செய்து ஒரு வேலையை 18 நாள்களில் முடிப்பர்.அதே வேலையை நாளொன்றுக்கு 14 மணி நேரம் வேலை செய்து 20 நாள்களில் முடிக்க எத்தனை ஆண்கள் தேவை?

47. A மற்றும் B ஆகிய இணைந்து ஒரு வேலையை 16 நாள்களில் முடிப்பர். A தனியே அந்த வேலையை 48 நாள்களில் முடிப்பர் எனில் B தனியே அந்த வேலயை எத்தனை நாள்களில் முடிப்பார்?

48. முக்கோணம் ABC இல் BC இன் மையக்குத்துக் கோடு $l_1$ ஆகும். BC = 12 செ.மீ, SM = 8 செ.மீ எனில் CSஐக் காண்க.




49. கொடுக்கப்பட்ட எண்களுக்கு தொடர்கழித்தல் முறையில் மீப்பெரு பொதுக் காரணி காண்க. 36 மற்றும் 80

50. அடுத்தடுத்த மூன்று ஒற்றை எண்களின் கூடுதல் 75, எனில் அவற்றுள் எது பெரிய எண்?

**VII. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி** **1x10=10**

51. $\overline{AI} \parallel \overline{SM}$, AI = 6 செ.மீ, IM = 5 செ.மீ, AM = 9 செ.மீ மற்றும் MS = 6.5 செ.மீ அளவுகளைக் கொண்ட AIMS என்ற சரிவகம் வரைந்து அதன் பரப்பளவைக் காண்க

(அல்லது)

52. BI = 6.5 செ.மீ, IR = 5 செ.மீ, மற்றும் $\underline{BIR}$ = 70° அளவுகளைக் கொண்ட BIRD என்ற இணைகரம் வரைந்து அதன் பரப்பளவைக் காண்க.

**VIII. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி.** **1x10=10**

53. x = 5 என்ற சமன்பாட்டிற்கு வரைபடம் வரைக.

(அல்லது)

54. A (2,5) B (-5, -2) M (-5, 4), N (1, -2) என்ற புள்ளிகளை இணைந்து நேர்க்கோடுகள் வரைக. மேலும் அவ்விரு நேர்க்கோடுகளும் வெட்டிக்கொள்ளும் புள்ளியைக் காண்க.